[12th March 1959

MR. SPEAKER : நீங்கள் படிக்கக் கூடாது. கேள்வி கேளுங்கள்.

SRI S. S. RAMASAMY PADAYACHI : பொது இடங்களிலோ, கடைகளிலோ, நிர்வாகிகளாக இருந்து நடத்தும் பொது பணிமனையிலோ ? அமைக்கக் கூடாதென்று சர்க்கார் அறிக்கை விடுவதற்கு அமைச்சர் முயற்சிப்பாரா என அறிய விரும்புகிறேன் ?

MR. SPEAKER : நீங்கள் சொல்வது என்னவென்று எனக்கு கேட்கவே இல்லை.

Did the Hon. Minister hear it?

Panchayat Courts in the North Arcot District

* 722 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Panchayat Courts in the North Arcot district, talukwise, together with their places of location?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Two copies of the statement showing the number of Panchayat Courts in the North Arcot district, taluk-wise and indicating their places of location, have been placed in the Legislature Library for reference by the Members of the Legislature.

SRI V. K. KOTHANDARAMAN : நீதியும், நிர்வாகமும் ஒருவரிடத்தில் இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே வேறு வேருக அமைக்கப்படுமா ? அதற்கு எவ்வளவு நாள் செல்லும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கிராமப் பஞ்சாயத்து சட்டம் புதியதாக இந்த மன்றத்திலே இயற்றப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்தச் சட்டப்படி பழைய முறையிலே பஞ்சாயத்து கோர்ட்டுக்கள் தேர்ந்தெடுக்கப்பட மாட்டாது. இரு வித பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவது முதற் கொண்டு அது மாற்றப்படும்.

SRI G G. GURUMURTHI : புது பஞ்சாயத்துச் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்துப் போர்டு கேஸ்களை விசாரிக்கக்கூடிய அதிகாரம் இல்லை. அப்படி இல்லாத இடங்களிலே தனியாக பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

Prize scheme for teachers

* 723 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கக் கல்வி இலாகா ஏற்படுத்தியிருக்கும் ஆசிரியர் பரிசுத் திட்டத்திற்கு நம் மாநிலத்தில் பரிசுக்குரிய ஆசிரியர்கள் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டுவிட்டனவா ?

(ஆ) இல்லையானால் எப்போது செய்யப்படும் ?

(இ) இப் பரிசுத் திட்டத்திற்கு ஆசிரியர்கள் எந்த அடிப்படைக் கொள்கையின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?